**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO. E.P.8/2024**

**Deposition of R.W. 1-** ஆனந்த வள்ளி

**Dated:06.10.2025**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி எனது மகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அருணாச்சல பொறியியல் கல்லூரியில் படித்தார். எனது மகளான 1ம் பிரதிவாதியை சென்னையில் திருமணம் முடித்து கொடுத்துள்ளேன். மருமகனும், மகளும் சென்னையில் வேலை செய்து வருகிறார்கள் என்றால் மருமகன் வேலை பார்க்கிறார், மகள் வேலை பார்க்கவில்லை. எனது மகளும் ஐ.ற்றி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது மகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் வங்கியிடம் கல்வி கடன் வேண்டி மனு கொடுத்து கடன் பெற்றோம் என்றால் சரிதான். கடன் வாங்கும் போது திருவிதாங்கோட்டில் எனது கணவரின் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். கடன் பெறும் போது எனது கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்தார். கம்பெனி சரியில்லை என்று வந்து விட்டார். திருவிதாங்கோட்டில் ஊருக்குள் எங்கள் வீடு உள்ளது. 4 செண்ட் பரப்பில் வீடு உள்ளது. 1ம் பிரதிவாதியை தவிர மேலும் ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் மகனும் இருக்கின்றனர். நான் சட்ட உதவி மையத்தின் மூலம் வழக்கறிஞர் நியமனம் கேட்கவில்லை நேரடியாக தான் வழக்கறிஞர் நியமனம் செய்துள்ளேன். அசல் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீட்டில் உள்ள பொருட்கள் எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு 1987ல் திருமணம் நடந்தது. 2

பெண்குழந்தைகளையும் திருமணம் முடித்து கொடுக்கும் வரை திருவிதாங்கோட்டில் உள்ள வீட்டில் தான் வசித்து வந்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். நான் வாடகை வீட்டில் வசித்ததை காட்ட வாடகை ஒப்பந்தம் தாக்கல் செய்யவில்லை. வாடகை ரசீதும் தாக்கல் செய்யவில்லை. இருந்தால் தேடி எடுத்து தாக்கல் செய்யலாம். என் கணவர் என் மீதோ, நான் என் கணவர் மீதோ காவல்நிலையத்தில் புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் என் கணவர் மீதோ, என் கணவர் என் மீதோ வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் கணவரை பிரிந்து வாழ்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் என் கணவரிடமிருந்து பராமரிப்பு தொகை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் திருவிதாங்கோடு வட்டத்தில் வாடகைக்கு குடியிருந்ததாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. யாரிடம் எந்த தேதியில் வாடகைக்கு எடுத்தேன் என்பது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தம்பி வீடு வாடகைக்கு எடுத்து கொடுத்ததாக நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. நான் என் தம்பி வீட்டில் அவர் கொடுக்க கூடிய உணவை உண்டு வாழ்ந்து வருவதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த தம்பி வீட்டில் எந்த தேதியிலிருந்து வசித்து வருவதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை. சகோதரர் பராமரிப்பில் வாழ்ந்து வருவதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கணவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டின் அருகே வேறு சொத்துகள் உள்ளதா என்று எனக்குத் தெரியாது. திருவிதாங்கோட்டில் எல்லா வசதிகளும் உண்டு. நான் வசிக்கும் வீடு உள்ள பகுதியில் செண்ட்

ரூ.15,00,000/- விலை போகும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சொத்தை ஜப்தி செய்து விடக்கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டிகைச் சொத்துக்கள் என் கணவருக்கு பாத்தியப்பட்டது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் சுயஉதவி குழுக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் கணவர் இருசக்கர வாகனம் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. திருமணம் ஆனது முதல் தற்போது வரை அதே வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் கடனாக வாங்கிய பணம் பொது மக்களின் பணம் என்றால் சரிதான். வீட்டின் அருகே உள்ள நிறைய பெண்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. மாதம் ரூ.25,000/- வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்குள் 10 தென்னை மரங்கள் உள்ளன என்றால் சரியல்ல. மனுதாரருக்கு பணத்தை திரும்ப செலுத்தக்கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.